**எஸ்.டி.சி .எண்.2639/2023 நாள்– 25.06.2026 பக்கம் /**
**ம.சா .1 கோகுல்ராஜ் த/பெ.சுப்பிரமணி**
**எதிரி ஆஜர்.**

**C.M.P 375/2026 கடந்த 20.04.2026 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) நான் பேக்கரி வைத்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எவ்வாறு தெரியும் என்றால் பழக்கடை வைத்திருந்ததால் அதன் மூலம் அறிமுகம். எங்கு பழக்கடை வைத்துள்ளார் என்றால் தாந்தோனிமலை சுங்க கேட்டில் வைத்துள்ளார். பழகடையில் நான் சென்ற வகையில் பழக்கமாக என்றால் என்னுடைய பேக்கரிக்கு பழம் விநியோகம் செய்வது மூலம் பழக்கம். ரூ.3 இலட்சம் கைமாற்று கடனாக கொடுத்தேன்.

2) நான் நிதி நிறுவனத்தில் பங்குதாரராகவோ, அல்லது நிதி நிறுவனங்களில் கடன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. கைமாற்று கடனாக கொடுத்தால் இவ்வழக்கு காசோலையை மட்டும் பெற்றுக்கொண்டேன். எதிரிக்கு நான் கடன் தொகையை கொடுத்தது யாரும் நேரடியாக பார்த்த சாட்சி இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்த தொகை எந்த வகையில் கிடைக்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) ஆனால் எனது சேமிப்பில் இருந்து கொடுத்தேன். எதிரியை பற்றி வேறு விவரங்கள் தெரியுமா என்றால் அவரது அப்பாவை மட்டும் தெரியும் மற்ற விவரங்கள் தெரியாது. எதிரி கடனை திருப்பி செலுத்துவற்கு போதிய வருமானத்துடன் உள்ளாரா என்பதை கடன் கொடுத்தாக சொல்லும் சமயத்தில் தெரிந்து கொண்டேனா என்றால் எதிரிக்கு சொந்த வீடு உள்ளது. ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்**

4) அவ்வப்போது சிறு தொகையை கைமாற்றாக கொடுத்து திரும்பி செலுத்தியுள்ளார். என்னுடைய வழக்கில் எதிரி அடிக்கடி கடன் வாங்கி அதனை திருப்பி செலுத்திய விவரத்தை நான் எனது வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . இவ்வழக்கு காசோலையை கடன் வாங்கிய பின்பு எப்பொழுது கொடுத்தார் என்றால் கடன் வாங்கிய அன்றே கொடுத்தார். கடன் வாங்கிய ரூ– 3 இலட்ச தொகையை 1 வார காலத்திற்குள் திருப்பி தருவதாக சொன்னார்.

5) எதிரி கடன் பெற்ற சமயத்தில் எங்கு குடியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நரிக்கட்டியூரில் குடியிருந்தார். கரூர், வேலுச்சாமிபுரம், சேரன் நகரில் வசிக்கும் ஈஸ்வரமூர்த்தி எனது நெருங்கிய கூட்டாளியா என்றால் இல்லை. ஈஸ்வரன் என்பவரை மட்டும் தான் தெரியும். அவர் எனக்கு பழக்கமானவர்.அவரை தவிர ஈஸ்வரமூர்த்தி என மற்ற இரண்டு நபர்களை தெரியும் அவர்களில் ஒருவர் ஆத்துார் பிரிவிலும் மற்றொருவர் ரெட்டிபாளையத்திலும் குடியிருந்து வருகிறார்கள்.

6) ரெட்டிபாளையத்தில் இருக்கும் ஈஸ்வரமூர்த்தி என்பவர் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து வருகிறார். மேற்படி ஈஸ்வரமூர்த்தி Sumo Fabrics என்ற கடையை நடத்தி வருகிறாரா என்றால் தெரியாது– எதிரி மேற்படி Sumo Fabrics நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அந்த நிறுவனத்தில் பணிபுரியும் போது மேற்கண்ட ஈஸ்வரமூர்த்தி என்பவரிடம் ரூ. 1,50,000/–யை கடந்த 2017 ம் வருடம் பெற்ற கடனுக்காக கொடுக்கப்பட்டது தான் இவ்வழக்கு காசோலை என்றால் சரியல்ல. அந்த கடனுக்கு எதிரி தொடர்ந்து அவரிடம் வட்டி செலுத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்**

7) எதிரிக்கும் ஈஸ்வரமூர்த்திக்கும் இடையே ஏற்பட்ட மனகசப்பின் காரணமாக ஈஸ்வரமூர்த்தி என்பவர் என் மூலம் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு யார் என்று தெரியாது என்றாலும், எனக்கும் எதிரிக்கும் எவ்வித அறிமுகமும் இல்லை என்றும், வழக்கிற்காக நண்பர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், ஈஸ்வரமூர்ததி என்பவர் மூலம் தெரிந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8) வழக்கு காசோலையை நானும் ஈஸ்வரமூர்த்தியும் பொய்யாக கூட்டு சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எதிரி எந்த காலத்திலும் என்னை சந்திக்கவில்லை என்றாலும், என்னிடமிருந்து கடன் தொகை பெறவில்லை என்றாலும் அதற்கு ஆதரவாக இவ்வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையின் மீது சட்டப்படியான கடன் தொகை எதுவும் எதிரி எனக்கு கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் எதிரி எவ்வித குற்றத்தையும் செய்யவில்லை என்றாலும், அதனால் எதிரி இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்**